1994 நவம்பர் 10]

இருக்கிறது. அதன்-மூலமாக இந்த 2,483 காவலர்களுக்கு, பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதி செய்துதர, வீடு கட்டித் தர தமிழக அரசும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் முயன்று கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 2,486 காவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்றும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன என்றும் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு மட்டுமில்லாமல், குழித்துறை, தக்கலையில் உள்ளவர்களுக்கு தண்ணீர் வசதி போதவில்லை என்று கூறுகிறார்கள். நாம் எங்கு வேண்டுமானாலும் தண்ணீர் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அப்படியிருந்தும் அவர்களுக்குத் தண்ணீர் வசதி போதவில்லை என்றும், ஒழுங்காக சப்ளை செய்யப்படவில்லை என்றும் ஒரு புகாரைக் கூறினார்கள். எனவே, கருணைகூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தண்ணீர் தட்டுப்பாட்டை உடனடியாகத் தீர்க்க ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 82, திருமதி கே. பஞ்சவர்ணம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

82—

மெலட்டூர் அரசு மருத்துவமனையிலுள்ள எக்ஸ்ரே இயந்திரத்தைச் செப்பனிடுதல்

***21252—திருமதி கே. பஞ்சவர்ணம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*1994 நவம்பர் 10*

(அ) வலங்கைமான் தொகுதி, மெலட்டூர் அரசு மருத்துவமனையில் உள்ள எக்ஸ்ரே இயந்திரம் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை இயங்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)*: மெலட்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள எக்ஸ்ரே இயந்திரம் 25.4.94 முதல் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது.

முற்பகல் *10–05*

திருமதி கே. பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்த அரசு மருத்துவமனைக்கு நானே நேரடியாக விஜயம் செய்தபொழுது அந்த இயந்திரம் பழுதடைந்த நிலையில் இருந்தது. மேலும், அந்தப் பகுதியைச் சுற்றி சுமார் 30, 40 கிராமங்கள் பயன்படக்கூடிய வகையில் அந்த மருத்துவமனை உள்ளது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு 4-வது மாதம் அதைச் செய்ல்படுத்தியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்த மருத்துவமனையில் படுக்கை வசதிகளெல்லாம் மிகவும் குறைவாக இருப்பதோடு, அணைத்து பெட்களுமே பழுதடைந்த நிலையில் காணப்பட்டன. அதை சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இன்றைக்கு அந்த மருத்துவமனையில் பணிபுரியக் கூடிய பணியாளர்களெல்லாம் பெரும்பாலும் தஞ்சையிலிருந்து வருகிறார்கள். 20, 24 கிலோமீட்டருக்குக் குறையாமல் தூரம் இருக்கக்கூடிய அந்த மருத்துவமனைக்கு அந்தப் பகுதியிலேயே மருத்துவர்களுக்குக் குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கக்கூடிய வகையில் அரசு முன்வருமா, அமைச்சர் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எக்ஸ்ரே இப்பொழுது இயங்கி வருகிறது. மற்ற பழுதடைந்த ஃபர்னிச்சரைப் பொறுத்தவரையில் என்ன நடவடிக்கையெடுக்க முடியுமோ அதை எடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்கும். அதுவல்லாமல், அந்த மருத்துவமனையிலே பணியாற்றுகின்ற

1994 நவம்பர் 10]

பணியாளர்கள் அங்கேயே தங்க வேண்டும். ஒரு வேளை அரசாங்கம் குவார்ட்டர்ஸ் கொடுக்கவில்லை என்றால் எட்டு கிலோ மீட்டர் சுற்றளவிலே அவர்கள் தங்க வேண்டுமென்ற விதிமுறை இருக்கிறது. எனவே,அந்த விதிமுறைகேற்ப தங்க வேண்டுமென்று அறிவுறுத்தப்படும். நிதிநிலைமையை மனத்திலே கொண்டு இதற்குக் குவார்ட்டர்ஸ் கட்டுவதா, இல்லையா என்பதைப்பற்றி ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 83, டாக்டர் க. கோபால், இருக்கையில் இல்லை.

வினா எண் 84, டாக்டர் எம். மோசஸ் மற்றும் திரு. ஆ. பாலையா. டாக்டர் எம். மோசஸ் இருக்கையில் இல்லை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

84—

நாகர்கோவில் நகராட்சிக்கு நேசமணி போக்குவரத்துக் கழகம் வழங்க வேண்டிய தொகை

24920--டாக்டர் எம். மோசஸ் :

திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் நேசமணி போக்குவரத்துக் கழக நிர்வாகம், நாகர்கோவில் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையங்களை உபயோகித்த வகையில் தொகை அளிக்க வேண்டியுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அத்தொகையினை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நாகர்கோவில் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தை நேசமணி போக்குவரத்துக் கழகம் உபயோகித்ததற்கான பேருந்துக் கட்டணம் செலுத்தவதில் உள்ள நிலுவைத் தொகை குறித்து 23.2.94-ம் நாள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் விவாதித்து முடிவு எடுக்கப்பட்டு, தற்பொழுது நேசமணி போக்குவரத்துக் கழகத்தால் பேருந்து நிலையக் கட்டண நிலுவைத் தொகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.